DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**C.C.No. 418/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | சத்தியா | Age | : | 35 |
| H/N | : | சுசீந்திரன் | Occupation | : | செவிலியர் |
| Village | : | கழுகூரணி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 20th day of December 2024.

**20.12.2024**

**(எதிரி ஆஜர்).**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** சம்பவம் நடந்த மறுநாள் கேணிக்கரை காவல்நிலைய போலீசார் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வந்து என்னிடம் புகார்வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். அதிகாலை 05.00 மணியளவில் வாங்கினார்கள். போலீசார் என்னிடம் காலை 10.00 மணிக்கு தான் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. சம்பவமானது கிராம புற சாலையில் நடைபெற்றது என்றால் சரிதான். சம்பவம் நடக்கும்போது சாலை இருட்டாக இருந்தது என்றால் சரிதான். எனது அத்தையின் வீடு முல்லை நகரில் உள்ளது. அன்றைய தினம் நாங்கள் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சாலையின் வலது புறம் சென்றுகொண்டிருந்தோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த சாலையானது பெரிய சாலை ஆகும்.

**2.** சம்பவ சமயத்தில் போக்குவரத்து நெரிசல் இல்லை என்றால் சரிதான். அ.சா.2 எனது உடன்பிறந்த சகோதரர் இல்லை என்றால் சரிதான். அ.சா.2 ஒரு மருத்துவர் என்றால் சரிதான். அ.சா.2 ற்கு சொந்த ஊர் ஏர்வாடி என்றால் சரிதான். புகார்வாக்குமூலத்தில் அ.சா.2 சொல்லி தான் சம்பவ இடத்திற்கு ஆம்புலன்ஸ் வந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.2 யை எனக்கு எப்படி தெரியும் என்றால் நானும், அவரும் இராமநாதபுரம் கனகமணி மருத்துவமனையில் பணிபுரிகிறோம். புகார்வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் சொன்ன விவரங்களுக்கு முரணாக முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. முறையாக சாலை விதிகளை பின்பற்றவில்லை என்றாலும், நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. நஷ்ட ஈடு பெறுவதற்காக பொய்யான இந்த புகாரை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

PRABHAKARAN G

Digitally signed by PRABHAKARAN G
Date: 2024.12.20 18:31:47 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**